**தலைப்பு 138 - சுதேச மருத்துவத்துறை அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2013 ஆம் ஆண்டு**

---

இந்த அறிக்கை இரண்டு பகுதிகளை உள்ளடக்கியுள்ளது.

1 ஆம் பகுதி - அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களங்களின் கணக்குகள் தொடர்பான சுருக்கமான அறிக்கை

2 ஆம் பகுதி - ஒவ்வொரு தலைப்புக்குமான விபரமான அறிக்கை

## 1 ஆம் பகுதி

**சுதேச மருத்துவத்துறை அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களங்களின் கணக்குகள் மீதான சுருக்கமான அறிக்கை**

---

### 1. அமைச்சின் கீழுள்ள திணைக்களம்

| தலைப்பு | திணைக்களத்தின் பெயர் |
|---|---|
| 220 | ஆயுர்வேதத் திணைக்களம் |

### 2. கணக்குகள்

### 2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு

#### (அ) மொத்த ஏற்பாடு மற்றும் செலவினம்

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களத்திற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 1,770,400,000 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதிவரை இதில் ரூபா 1,068,844,373 பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க அமைச்சினதும் திணைக்களத்தினதும் தேறிய நிதி ஏற்பாடுகளிலிருந்தான சேமிப்புக்கள் முறையே ரூபா 166,407,763 தொகை மற்றும் ரூபா 535,147,864 அதாவது ஒதுக்கப்பட்ட தேறிய நிதி ஏற்பாட்டில் முறையே 35 சதவீதம் மற்றும் 41 சதவீதமாக இருந்தது. விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

| தலைப்பு | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | சேமிப்பு தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக |
|---|---|---|---|---|
| | தேறிய நிதியேற்பாடு | பயன்பாடு | சேமிப்புக்கள் | |
| | ரூபா | ரூபா | ரூபா | |
| 138 | 473,930,000 | 307,522,237 | 166,407,763 | 35 |
| 220 | 1,296,470,000 | 761,322,136 | 535,147,864 | 41 |
| மொத்தம் | 1,770,400,000 | 1,068,844,373 | 701,555,627 | 40 |

## 2.2 முற்பணக் கணக்குகள்

### 2.2.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்

**பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களத்திற்காக அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| விடய இல. | செலவினம் | | பெறுவனவு | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|---|
| | அதிகூடிய எல்லை | உள்ளபடியானவை | அதிகூடிய எல்லை | உள்ளபடியானவை | அதிகூடிய எல்லை | உள்ளபடியானவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 13801 | 11,000,000 | 7,978,083 | 4,000,000 | 6,346,532 | 36,000,000 | 21,117,515 |
| 22001 | 32,000,000 | 25,148,297 | 21,000,000 | 27,637,920 | 172,000,000 | 77,242,210 |

## 2.3 பொது வைப்புக் கணக்கு

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களத்தின் 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு வைப்புக் கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 13,723,680 ஆகும். விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

| அமைச்சு / திணைக்களம் | வைப்புக் கணக்கின் இலக்கம் | 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு மீதி |
|---|---|---|
| | | ரூபா |
| சுதேச மருத்துவத்துறை அமைச்சு | 6000/0000/00/0015/0050/000 | 280,363 |
| ஆயுர்வேதத் திணைக்களம் | 6000/0000/00/0015/0101/000 | 13,443,317 |
| மொத்தம் | | 13,723,680 |

## 2 ஆம் பகுதி

### ஒவ்வொரு தலைப்பிற்கும் உரிய விபரமான அறிக்கை

### 1. தலைப்பு 138 – சுதேச மருத்துவத்துறை அமைச்சு

### 1.1 கணக்காய்வின் நோக்கெல்லை

சுதேச மருத்துவத்துறை அமைச்சின் 2013 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணைக்கக்கூற்றுக்கள் பதிவேடுகள், ஆவணங்கள் மற்றும் ஏனைய அறிக்கைகள் உள்ளடக்கப்பட்ட ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2014 செப்தெம்பர் 22 ஆம் திகதி அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணைக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணைக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

### 1.2 கணக்குகள் மற்றும் இணைக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

ஒதுக்கீட்டுக் கணக்கு, இணைக்கக் கூற்று என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய சட்டரீதியான ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பராமரித்துச் செல்லல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணைக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பராமரித்துச் செல்லல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் சுதேச மருத்துவத்துறை அமைச்சின் ஒதுக்கீட்டுக் கணக்கும், இணக்கக் கூற்றும் இங்கே (அ) முதல் (உ) வரையான பொது அவதானிப்புக்கள் மற்றும் கீழே 1.4 தொடக்கம் 1.13 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்பட்டது.

### (அ) பதிவேடுகள் மற்றும் ஏடுகள் பேணப்படாமை

அமைச்சினால் கீழே காண்பிக்கப்படுகின்ற பதிவேடுகள் பேணப்பட்டிருக்க வில்லை.

| பதிவேட்டு வகை | | உரிய பிரமாணம் |
|---|---|---|
| (i) | நிலையான சொத்துக்கள் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றுநிருபம் |
| (ii) | இழப்பு மற்றும் நட்டங்கள் தொடர்பான பதிவேடு | நிதிப்பிரமாணம் 110 |

### (ஆ) பாதீட்டு முரண்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 02 செலவின விடயங்களிற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 4,000,000 தொகையான தேறிய ஏற்பாடு முழுவதும் சேமிக்கப்பட்டிருந்தது.

(ii) மீண்டெழும் செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாட்டில் 40 சதவீதத்தை விஞ்சி சேமிக்கப்பட்ட 12 சந்தர்ப்பங்கள் காணப்பட்டதுடன் அதன் பெறுமதி ரூபா 26,337,057 ஆகும்.

(iii) மூலதன செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாட்டில் 40 சதவீதத்தை விஞ்சி சேமிக்கப்பட்ட 09 சந்தர்ப்பங்கள் காணப்பட்டதுடன் அதன் பெறுமதி ரூபா 59,619,473 ஆகும்.

**(இ) பொது வைப்புக் கணக்கு**

----------------------------------------

2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு பொது வைப்புக் கணக்கின் மீதி ரூபா 280,363 ஆக இருந்ததுடன் 2011 ஒக்தோபர் 25 இல் வைப்புச்செய்யப்பட்ட ரூபா 10,000 தொகை தொடர்பாக நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்குகள்**

--------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 13801 ஆம் விடய இலக்க முற்பணக் கணக்கு தொடர்பாக 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான இணக்கக்கூற்றின் பிரகாரம் அத்திகதியில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 21,117,515 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 12,000 தொகையான நிலுவை மீதியை அறவீடு செய்வதின் பின்தொடர் நடவடிக்கைகள் நலிவான நிலையில் காணப்பட்டது.

(ii) 2005 யூலை 15 ஆந் திகதி இடமாற்றலாகிச் சென்ற உத்தியோகத்தர்களின் ரூபா 288,618 தொகையான கடன் மீதிக்குரிய கடன் கோவை கணக்காய்வு நடவடிக்கைகளுக்காகச் சமர்ப்பிக்கப்படடிருக்கவில்லை. அவ்வாறே அந்தக் கடன் மீதி உத்தியோகத்தர் மாற்றலாகிச் சென்ற அமைச்சிலிருந்து தீர்த்துக்கொள்வதற்கு 2014 யூன் 10 ஆந் திகதி வரையிலும் அமைச்சு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(iii) 61 உத்தியோகத்தர்களுக்கு ரூபா 5,867,744 கூட்டுத்தொகையான இடர் கடன் தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் தாபன விதிக்கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4:3:2 பிரிவின் பிரகாரம் அந்தக் கடன் மீதி தொடர்பாக அமைச்சு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(iv) அமைச்சால் இடர் கடன் செலுத்தும் போது கடனாளியினதும் பிணையாளியினதும் பிணை விபரங்கள் உள்ளடக்கப்பட்ட கடன் பதிவேடு பராமரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 1.4.1 உள்ளகக் கணக்காய்வு

2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளுக்காக அமைச்சிற்கு உள்ளகக் கணக்காய்வாளர் ஒருவர் நியமிக்கப்படாதிருந்ததுடன் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 1.4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவினை அமுல்படுத்தல்

மீளாய்வாண்டிற்குரிய கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் 3 கூட்டத் தடவைகள் நடாத்தப்பட்டிருந்தன.

## 1.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

### (அ) விளைவற்ற மற்றும் குறைவாக பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

கீழே வகைப்படுத்தப்பட்டவாறு சில சொத்துக்கள் விளைவற்று அல்லது குறைவாக பயன்படுத்தப்பட்டிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

| சொத்து வகை | அலகுகளின் எண்ணிக்கை | விளைவற்று அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட காலம் |
|---|---|---|
| கட்டிடம் | | |
| ஹோமியோபதி வைத்தியசாலையின் சமையலறைக்காக நிர்மாணிக்கப்பட்ட கட்டிடம் | 01 | 02 வருடங்கள் |
| மஹிந்த ராஜபக்ஷ ஹோமியோபதி வைத்திய கல்லூரிக்காக வழங்கப்பட்ட கட்டிடம் | 01 | 04 வருடங்கள் |

சமையலறைக்காக பயன்படுத்தப்படுகின்ற 02 குளிர்சாதனப் பெட்டிகள் (Hitachi) 03 அடுப்புகளுடனான 02 வாயு அடுப்புக்கள், ஒரு பெரிய எரிவாயு அடுப்பு, 02 எரிவாயு சிலின்டர்கள் (பெரியது), 01 ரைஸ் குகர், மின் தேங்காய் துருவியொன்று மற்றும் சமையலறைகளின் பயன்பாட்டிலுள்ள 33 விடயங்கள் 03 வருடகாலமாக விளைவற்றுக் காணப்பட்டதுடன் நோயாளர்களுக்குத் தேவையான உணவுகள் வெளியிலிருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

**(ஆ) வருடாந்த பொருள் மெய்மையாய்வினை மேற்கொள்ளல்**

2010 திசெம்பர் 17 ஆந் திகதிய பீஎப்/மெய்மையாய்வுச் சபை/01 ஆம் இலக்க அரசாங்க நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தினால் திருத்தப்பட்ட 2009 திசெம்பர் 09 ஆந் திகதிய 441 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் படி 2013 இன் வருடாந்த பொருள் மெய்மையாய்வினை மேற்கொண்டு 2014 நவம்பர் மாதம் வரையும் அந்த அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன் 2012 ஆம் ஆண்டிற்கான பொருள் மெய்மையாய்வு அறிக்கை 2014 நவம்பர் மாதம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

**(இ) வெளித்தரப்பினர்களுக்கு வழங்கப்பட்ட சொத்துக்கள்**

அமைச்சிற்குச் சொந்தமான லொறியொன்று இலங்கை ஆயுர்வேத மருந்துக் கூட்டுத்தாபனத்திற்கு விடுவிக்கப்பட்டிருந்தது.

**(ஈ) ஏனைய நிறுவனங்களுக்குச் சொந்தமான சொத்துக்களை முறையற்ற வகையில் பயன்படுத்துதல்**

ஆயுர்வேத திணைக்களத்திலிருந்து 2010 மே 25 ஆந் திகதி முதல் சுதேச மருத்துவத்துறை அமைச்சின் பாவனைக்கான பெறப்பட்ட வேன் வாகனம் 2014 ஆம் ஆண்டு வரையிலும் ஆயுர்வேத திணைக்களத்திற்கு மீளக் கையளிக்கப்பட்டிருக்கவில்லை.

**(உ) தீர்க்கப்படாத பொறுப்புக்கள்**

நிதிப்பிரமாணம் 94(1) இற்கு முரணான செலவின விடயமொன்றின் கீழ் ஒதுக்கப்பட்ட நிதியேற்பாட்டில் பயன்படுத்தப்பட்டதன் பின்னர் சேமிப்பு ரூபா 150,711 ஆக இருந்த போதிலும் அச் சேமிப்பு ரூபா 58,549 இனால் மிகைத்து ரூபா 209,260 தொகையான பொறுப்புக்கள் ஏற்பட்டிருந்தன.

**1.6 இணங்காமைகள்**

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணங்காமைகள்**

1990 ஒக்தோபர் 10 ஆம் திகதிய 41/90 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் பிரகாரம் அமைச்சிற்குச் சொந்தமான குழாம் வாகனங்களின் எரிபொருள் நுகர்வு 06 மாதங்களுக்கு ஒரு தடவை பரீட்சிக்கப்பட்டிருக்கவில்லை.

**1.7 செயற்திட்டத்தை அமுலாக்குவதிலுள்ள நலிவுகள்**

5 ஏக்கர் அளவு நிலத்தினை உடைய வெலிசர அரசாங்க ஹோமியோபதி வைத்தியசாலை அமைந்துள்ள காணியில் 2003 ஆம் ஆண்டில் நிர்மாண நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்ட புதிய கட்டிடம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ)** 2003 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட 5 ஏக்கர் அளவு நிலத்தினை உடைய வெலிசர அரசாங்க ஹோமியோபதி வைத்தியசாலை அமைந்துள்ள காணி 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் அமைச்சிற்கு கையளிக்கப்பட்டிருக்கவில்லை. அந்த நிலத்தில் நிர்மாணிக்கப்படுகின்ற புதிய கட்டிடம் 2012 யூலை 23 ஆந் திகதிய அமைச்சின் கொள்வனவுக் குழுவின் 02 ஆம் இலக்க தீர்மானத்தின் மூலம் ரூபா 79 மில்லியனுக்கு நிர்மாணிப்பதற்காக கட்டிடத் திணைக்களத்திற்கு கையளிக்கப்பட்டிருந்தது. ஒப்பந்த உடன்படிக்கையின் படி இந்த ஒப்பந்தத்திற்கான கூறுவிலை கோரல் கட்டிடத் திணைக்களத்தால் மேற்கொள்ள வேண்டிய போதிலும் அவ்வாறு திறந்த கூறுவிலைகள் கோரப்படாமலும் அமைச்சின் கொள்வனவுக் குழுவின் அங்கீகாரமின்றியும் அந்த ஒப்பந்தம் அரச பொறியியல் கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்பட்டிருந்தது.

**(ஆ)** 2014 மார்ச் 19 ஆந் திகதிய ஹோமியோபதி வைத்தியசாலையின் செயற்பொறுப்பு வைத்திய உத்தியோகத்தரின் கடிதத்தின் படி மேற்கூறப்பட்ட கட்டிட நிர்மாணத்தின் முதலாவது கட்டம் 2014 சனவரி 3 ஆந் திகதி பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும், 2014 ஆகஸ்ட் மாதம் வரையில் அக்காலம் 6 மாதங்களுக்கு மேல் கடந்திருந்த போதிலும் அதனைப் பூர்த்தி செய்வதற்கு முடியாதிருந்தது.

**(இ)** திணைக்களத்தின் பொறியியலாளரின் ஒத்துழைப்பு இந்த நிர்மாணத்திற்காக பெறப்பட்டிருக்கவில்லை.

**(ஈ)** 2014 மார்ச் 20 திகதிய 03/02/06 ஆம் இலக்க சுதேச மருத்துவத்துறை அமைச்சின் கணக்காளரின் கடிதத்தின்படி இந்த நிர்மாணத்திற்காக 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளின் போது ரூபா 26,350,000 தொகையான நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 25,088,077 தொகை கட்டிடத் திணைக்களத்தால் செலவிடப்பட்டிருந்தது. இருந்த போதிலும் பூர்த்தி செய்யப்பட்ட வேலை அளவுகளின் செயல்முன்னேற்ற அறிக்கை காணப்படாதிருந்ததுடன் பௌதீக செயல்முன்னேற்றம் மற்றும் ஒட்டுமொத்த செலவினம் என்பன ஒப்பிடப்பட்டிருக்கவில்லை.

**(உ)** 2014 மார்ச் 20 ஆந் திகதிய மேற்கூறப்பட்ட கடிதத்தின் படி இதுவரை பூர்த்தி செய்த வேலை தொடர்பாக கட்டிட பிரதான பொறியியலாளர் அறிக்கையைப் பெற்றுக்கொள்வதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்தது. எனினும், அவ்வாறான அறிக்கையொன்று கணக்காய்வுத் திகதியான 2014 ஏப்ரல் 28 ஆந் திகதி வரையிலும் பெறப்பட்டிருக்கவில்லை.

**(ஊ)** உடன்படிக்கையின்படி வேலைத்தள மேற்பார்வையும் அதன் கட்டுப்பாடும் கட்டிடத் திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட வேண்டி இருந்ததுடன் சுதேச மருத்துவத்துறை அமைச்சையும் (Client) பொறியியல் கூட்டுத்தாபனத்தையும் (Contractor) அழைத்து மாதாந்த செயல்முன்னேற்றம் மீளாய்வு செய்யப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு மேற்கொள்ளப்பட்டமைக்கான சான்றுகள் கோவையில் காணப்படவில்லை.

**(எ)** உடன்படிக்கையின்படி இந்த வீடமைப்புத் தொகுதியின் நிர்மாண நடவடிக்கைகள் 2014 திசெம்பர் 31 ஆந் திகதி பூர்த்தி செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டமையால் இந்த நிர்மாணங்களின் தற்போதைய செயல்முன்னேற்றம் கணக்காய்விற்கு அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை.

## 1.8 செயலாற்றல்

------------------------

### (அ) போதிய அளவில் நிறைவேற்றப்படாத பிரதான பணிகள்

---------------------------------------------------------------------------------

அமைச்சில் பிரதான செயற்பாடுகள் போதிய அளவில் நிறைவேற்றப்படாதிருந்ததுடன் அவ்வாறு அவதானிக்கப்பட்ட சந்தர்ப்பங்களில் சில கீழே காண்பிக்கப்படுகின்றது.

(i) மீளாய்வாண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தின்படி ஆயுர்வேத பாதுகாப்பு சபைகளை செயற்படுத்துவதின் கீழ் தெரிவு செய்யப்பட்ட பாதுகாப்பு சபைகளில் செயற்திட்டங்களை அமுல்படுத்துதல் 2013 திசெம்பர் மாதமளவில் மேற்கொள்ள வேண்டி இருந்த போதிலும் 2014 சனவரி 26 ஆந் திகதி வரையிலும் கிடைக்கப் பெற்ற செயற்திட்டங்கள் மதிப்பீட்டிற்கு உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 2014 நவம்பர் அளவில் அமைச்சில் அமைந்துள்ள வைத்தியசாலை வளவில் நிர்மாணிக்கப்படுகின்ற போசனை மண்டபத்தின் வேலை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(iii) மீளாய்வாண்டின் 12 போசனை நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், கொழும்பு மற்றும் பதுளை பிரதேசங்களில் 2 நிகழ்ச்சித்திட்டங்கள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தன.

**(ஆ) மூலிகைத் தோட்டங்களைப் பராமரித்தல்**

---

ஆராய்ச்சி மூலிகைத் தோட்டங்களைப் பராமரித்தல் மற்றும் மேம்படுத்துதல் அமைச்சின் பணியாகும். அமைச்சின் கீழுள்ள 02 மூலிகைத் தோட்டங்கள் (வெதகம 44 ஏக்கர் மூலிகைத் தோட்டம், மெதிரிகிரிய 25 ஏக்கர் மூலிகைத் தோட்டம்) மற்றும் ஆயுர்வேதத் திணைக்களத்தின் கீழுள்ள 05 மூலிகைத் தோட்டங்கள் (நீலபெம்ம 25 ஏக்கர், மதவாச்சி தங்கொல்ல 50 ஏக்கர், ஹிவல் கந்துர 100 ஏக்கர், பீல்ல அம்பன்பொல 69 ஏக்கர்) என்பன காடுவளர்ந்து காணப்பட்டதுடன் அவற்றைப் பராமரித்தலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**(இ) நடமாடும் விற்பனை வாகனங்களை வழங்கும் நிகழ்ச்சித்திட்டம்**

---

உள்நாட்டு உணவுகளை மேம்படுத்தும் நோக்கத்தில் அமைச்சால் உடன்படிக்கை செய்யப்பட்ட மற்றும் உடன்படிக்கையின்றிய ரூபா 391,105 தொகை செலவிட்டு 11 நடமாடும் விற்பனை வண்டிகள் பல்வேறு நபர்களுக்கு வழங்கப்பட்டிருந்தது. அது தொடர்பான மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) அமைச்சின் அந்த நடமாடும் விற்பனை வண்டிகளைப் பெற்ற நபர்கள் உள்நாட்டு உணவுகளை மேம்படுத்தும் வேலைத் திட்டங்களுக்கு இணங்க செய்கின்றனரா என்பது தொடர்பான பின்தொடர் நடவடிக்கைகள் மேற்கொண்டமைக்கான சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) நடமாடும் விற்பனை வண்டிகளை வழங்கும் உடன்படிக்கையின் நிபந்தனை 5 இற்கு இணங்க நடமாடும் விற்பனை வண்டிகளில் இருந்து உழைக்கப்படுகின்ற வருமானத்தில் மாதத்திற்கு ரூபா 500 படி சுதேச வைத்திய அபிவிருத்தி நிதயத்திற்கு செலவு வைக்கவேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நடமாடும் விற்பனை வண்டிகளைப் பெற்ற நபர்கள் அவ்வாறு நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை.

**(ஈ) போசாக்கு இல்ல நிகழ்ச்சித்திட்டம்**

-----------------------------------------------------

உள்நாட்டு உணவுப் பானங்களை மேம்படுத்துவதனூடாக மக்களின் போசாக்கு நிலையை உயர்த்தும் நோக்கத்துடன் 2007 ஆம் ஆண்டு முதல் 2012 ஆம் ஆண்டு வரை ரூபா 1,842,605 தொகை செலவிடப்பட்டு 5 போசாக்கு இல்லங்கள் நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும் அந்த நிர்மாணத்தின் நோக்கங்கள் நிறைவேற்றப்படுகின்றனவா, அவை தற்போது அமுல்படுத்தப்படுகின்றனவா எனவும் அவற்றின் செயலாற்றல் நிலைமை தொடர்பாகவும் கண்டறிவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

2012 செப்தெம்பர் 10 ஆந் திகதி முதல் 2013 யூன் 05 ஆம் திகதி வரையான காலத்தில் பூர்த்தி செய்யும் நோக்கத்தில் நைனாதீவில் ரூபா 3,449,546 செலவில் நிர்மாணிக்கப்பட்ட போசணை மண்டபம் மற்றும் ஆயுர்வேத மருந்தகம் என்பன 2013 யூன் 10 ஆந் திகதி வேலை பூர்த்தி செய்யப்பட்டு கையளிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் அமைச்சால் அதன் தற்போதைய நிலை தொடர்பாக கண்டறிந்து பரீட்சிக்கப்பட்டிருக்கவில்லை.

**(உ) “ஹெலவெத” வீட்டு நிகழ்ச்சித்திட்டம்**

-----------------------------------------------------

2005 செப்தெம்பர் 22 ஆந் திகதிய அமங்/05/1301/022/022 ஆம் இலக்க அமைச்சரவைப் பத்திரத்தின் கீழ் பாரம்பரிய ஆயுர்வேத வைத்தியர்கள் முகங்கொடுக்கும் பிரதான பிரச்சினையாக சுதேச வைத்தியத்துறை அமைச்சால் இனங்காணப்பட்ட வதிவிட சிகிச்சை பெறுவதற்கான வசதிகளை வழங்கும் நோக்கத்தில் இந்த செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. இதன் கீழ் அமைச்சால் 42 “ஹெலவெத” வீடுகள் நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன்

அதில் 40 இற்காக ரூபா 40,933,388 தொகை செலவிடப்பட்டிருந்தது. ஒரு வெத வீடு பாதுகாப்பு அமைச்சின் செலவில் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. புத்தள தேசத்திற்கு மகுடம் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ''ஹெலவெத'' வீடொன்று நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் அதன் மதிப்பிடப்பட்ட செலவினம் ரூபா 813,325 ஆகும். இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2013 ஆகஸ்ட் மாதத்தின் போது மாகாண ஆயுர்வேத ஆணையாளரின் மூலம் அமைச்சால் ''ஹெலவெத'' வீடுகளின் தற்போதைய செயல்முன்னேற்றம் கோரப்பட்டிருந்தது. அதன் படி 32 ''ஹெலவெத'' வீடுகளில் ரூபா 17,365,044 கூட்டுத்தொகை செலவில் கட்டியெழுப்பிய 16 ''ஹெலவெத'' வீடுகளின் செயல்முன்னேற்றம் தொடர்பான தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) ரூபா 10,276,337 கூட்டுத்தொகை செலவில் நிர்மாணிக்கப்பட்ட 09 ''ஹெலவெத'' வீடுகளின் தகவல்கள் கோரப்பட்டிருக்கவில்லை.

(iii) மீளாய்வாண்டின் இறுதியளவில் ரூபா 1,814,946 கூட்டுத்தொகையான செலவில் நிர்மாணிக்கப்பட்ட 02 ''ஹெலவெத'' வீடுகள் செயற்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. அமைச்சால் அரசாங்கத்தின் நிதியைச் செலவிட்டு நிர்மாணிக்கப்பட்ட மேற்கூறப்பட்ட செயற்திட்டத்தின் தற்போதைய நிலைமை தொடர்பாக கடிதமொன்றின் மூலம் விசாரிக்கப்பட்டதுடன் அதன் போது செயற்படாத ''ஹெலவெத'' வீடுகள் தொடர்பாக போதியளவில் பங்களிப்பினை அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**(ஊ) திட்டமிடல்**

--------------------

**வருடாந்த செயல்நடவடிக்கை திட்டம், கூட்டிணைந்த திட்டத்திற்கு இணங்காமை**

--------------------------------------------------------------------------------------------------------------------------------

அமைச்சின் 2012 – 2016 காலப்பகுதிக்காக தயாரிக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டத்தில் ஹோமியோபதி வைத்தியசாலை வளவில் நிர்மாணிக்கப்படுகின்ற விடுதித் தொகுதி மற்றும் ஹோமியோபதி வைத்திய சபையின் நிருவாகக்

கட்டிடத்தின் பழுதுபார்த்தல் போன்ற செயற்பாடுகள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. 2013 ஆம் ஆண்டு செயல்நடவடிக்கைத் திட்டத்தில் அந்த செயற்பாடுகள் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் பௌதீகரீதியாகவும் அச் செயற்பாடுகள் நிறைவேற்றப்பட்டிருந்தது.

**1.9 வங்கிக் கணக்கு செயற்பாடுகளின் குறைபாடுகள்**

---

**சீராக்கப்பட வேண்டிய மீதிகள்**

---

அமைச்சால் 2013 திசெம்பர் மாதத்திற்காக தயாரிக்கப்பட்ட வங்கி இணக்கக் கூற்றுக்களின் காணப்படுகின்ற சீராக்கல்கள் தொடர்பான பகுப்பாய்வின் பிரகாரம் வழங்கப்பட்டிருந்தும் கொடுப்பனவுக்காக சமர்ப்பிக்கப்படாத காலாவதியான ரூபா 13,666 பெறுமதியான காசோலைகள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 396(ஈ) இன் பிரகாரம் அமைச்சால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**1.10 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

---

அமைச்சால் மேற்கொள்ளப்பட்ட சில கொடுக்கல் வாங்கல்கள் சர்ச்சைக்குரிய வடிவிலானதாக இருந்தன. தெரிவுப் பரிசோதனைகளின் போது வெளிப்படுத்தப்பட்ட அவ்வாறான சில கொடுக்கல் வாங்கல் தொடர்பான விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) சுதேச வைத்தியத்துறை அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளருக்கு விலாசமிடப்பட்ட கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்தின் பணிப்பாளரின் 2013 நவம்பர் 20 ஆந் திகதிய கடிதத்தின் ஆலோசனையின் படி ரூபா 1,436,341 பெறுமதியான 7,981 பக்கற்று லெக்டோஸ் இருப்புக்கள் 2014 மார்ச் 05 ஆந் திகதி வரையிலும் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை. 2014 மார்ச் 05 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுப் பரிசோதனையின் பின்னர் இந்த லெக்டோஸ் இருப்பு அப்புறப்படுத்தப்பட்டிருந்த போதிலும், இது தொடர்பாக நிதிப்பிரமாணம் 102 இன் பிரகாரம் பரிசோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு நட்டத்திற்கு பொறுப்பான உத்தியோகத்தர் தீர்மானிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஹோமியோபதி வைத்திய சபையிலிருந்து 2012 மே மாதத்தின் போது வைத்தியசாலைக்கு கிடைத்த 927 மருந்து போத்தலின் இருப்புக்கள் பாவனைக்கு எடுக்கப்படாதிருந்ததுடன் தேவையற்றதாக பாரிய மருந்து இருப்புக்கள் வைத்தியசாலைக்கு வழங்கப்பட்டிருந்தமை இந்த மருந்துகள் பயன்படுத்தக்கூடியதா என பரிசோதனைகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) காலாவதித் திகதி 2012 நவம்பர் எனக்குறிப்பிடப்பட்ட 367 மருந்து போத்தல்கள் கணக்காய்வுத் திகதியான 2014 மார்ச் 05 ஆந் திகதி வரையிலும் பயன்படுத்தப்பட்டிருந்தது.

## 1.11 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

-----------------------------------------------------------------

அமைச்சால் மேற்கொள்ளப்பட்ட சில கொடுக்கல் வாங்கல்கள் முறையற்றதாக இருந்தது. அவதானிக்கப்பட்ட அவ்வாறான சந்தர்ப்பங்களின் சில கீழே காணப்படுகின்றன.

(அ) ஏதாவது செயற்பாட்டினை மேற்கொள்வதற்கு முன் அது தொடர்பாக திட்டமிடப்பட்டு அதன்படி செலவின மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், அமைச்சால் 2013 சனவரி 01 ஆந் திகதி முதல் 2013 நவம்பர் 20 ஆந் திகதி வரை 90 சந்தர்ப்பங்களில் செலுத்தப்பட்ட ரூபா 1,335,945 தொகையான முற்பணம் தொடர்பாக அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) முற்பணம் வழங்கும் போது பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர் ஒருவரால் மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டியிருந்ததுடன் அது அங்கீகரிக்கப்பட்டதன் பின்னர் கொடுப்பனவு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு மேற்கொள்ளாது முற்பணத்தைக் கோருகின்ற உத்தியோகத்தரால் தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டின் அடிப்படையில் அமைச்சால் 10 சந்தர்ப்பங்களின் போது ரூபா 185,000 முற்பணம் செலுத்தப்பட்டிருந்தது.

## 1.12 நட்டங்களும் இழப்புக்களும்

------------------------------------------------

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட நட்டங்கள் மற்றும் இழப்புக்கள் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

**(அ) ஹோமியோபதி வைத்தியசாலையின் மதிலின் ஒரு பகுதி உடைந்து விழுந்தமை**

---

ஹோமியோபதி வைத்தியசாலையின் மதில் 2010 ஆம் ஆண்டின் போது கட்டிட திணைக்களத்தின் மூலம் அமைக்கப்பட்டிருந்ததுடன் அது 2013 மே 26 ஆந் திகதி மின்சாரக் கம்பனிக்குரிய மின்கம்பமொன்றில் உடைந்து விழுந்திருந்தது. இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) நிதிப்பிரமாணம் 104(1) இன் படி, நட்டமொன்று அல்லது இழப்பொன்று ஏற்பட்டவுடன் உடனடியாக அதன் அளவு மற்றும் காரணம் என்பவற்றைக் உரியவாறு அறிந்து கொள்வதற்கும் அதற்குப் பொறுப்பானவரை தீர்மானிப்பதற்காகவும் பரிசோதனை ஆரம்பிக்கப்பட வேண்டிய போதிலும் அமைச்சால் பரிசோதனைச் சபை ஒரு மாத தாமதத்தின் பின்னர் அதாவது 2013 யூலை 03 ஆந் திகதி நியமிக்கப்பட்டிருந்தது.

(ii) நிதிப்பிரமாணம் 104(3) இன் படி பூரணமான அறிக்கை சமர்ப்பிப்பதற்கு 7 நாட்களுக்குக் மேற்பட்ட தாமதம் ஏற்படும் என எதிர்பார்க்கப்படுமாயின் ஆரம்ப அறிக்கை உடனடியாக சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், நட்டம் ஏற்பட்டு ஆரம்ப அறிக்கை சமர்ப்பிப்பதற்கு 3½ மாத காலம் எடுக்கப்பட்டிருந்தது.

(iii) இந்த நட்டத்திற்குரிய ஆரம்ப அறிக்கையின் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) நிதிப்பிரமாணம் 104(4) இன் படி சமர்ப்பிக்கப்பட்ட பூரண அறிக்கையின் பிரகாரம் இந்த நட்டம் தொடர்பாக கட்டிடத் திணைக்களம் முழுமையான பொறுப்பினை ஏற்க வேண்டுமென தீர்மானிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் 2013 ஒக்தோபர் 21 ஆந் திகதிய 02/05/18 ஆம் இலக்க சுதேச வைத்தியத்துறை அமைச்சின் மேலதிக செயலாளரின் (அபிவிருத்தி) கடிதத்தில் ஹோமியோபதி வைத்தியசாலைக்கு புதிய

மதிலை நிர்மாணிக்கும் ஒப்பந்தம் கட்டிடத் திணைக்களத்திற்கு வழங்குவதற்காக மதில் உடைந்து விழுந்தமையால் ஏற்பட்ட நட்டத்தின் பொறுப்பிலிருந்து அத்திணைக்களம் விடுவிக்கப்பட்டதாக குறிப்பிடப்படுகின்ற அறிக்கை பெறப்பட வேண்டுமென பணிப்பொறுப்பு வைத்திய உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

(v) அமைச்சால் மீண்டும் ஒரு தடவை 2013 நவம்பர் 07 ஆந் திகதிய 08 ஆரம்ப புலனாய்வுகளைக் கொண்ட சுதேச வைத்தியத்துறை அமைச்சின் செயலாளரின் கடிதத்தின் மூலம் மீள் பரிசோதனைச் சபை நியமிக்கப்பட்டிருந்தது. அக் குழுவினாலும் நிதிப்பிரமாணம் 104(3) இன் படி ஆரம்ப அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(vi) 2014 ஏப்ரல் 21 ஆந் திகதிய மு.வி 1/2014 ஆம் இலக்க கடிதத்தின் மூலம் புதிய குழுவினால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையின் பிரகாரமும் பக்கச்சுவர் உடைந்து விழுந்ததன் பொறுப்பு கட்டிடத் திணைக்களம் என காண்பிக்கப்பட்டிருந்தது. மதில் உடைந்து விழுந்ததால் மின்சாரக் கம்பனியின் மின்கம்பத்திற்கு ஏற்பட்ட ரூபா 67,200 தொகை நட்டத்திற்கு மேலதிகமாக கட்டிடத் திணைக்களத்திற்கு மதிலின் அப்பகுதியைக் கட்டுவதற்காகச் செலுத்தப்பட்ட பணமும் உள்ளடக்கப்பட வேண்டியிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

**(ஆ) வாகன நட்ட இழப்பு**

-----------------------------------

அமைச்சால் ஆயுர்வேதத் திணைக்களத்திடமிருந்து பெறப்பட்டிருந்த வாகனமொன்று 2013 ஆம் ஆண்டின் போது விபத்திற்கு உள்ளாகியிருந்தது. அது தொடர்பாக நிதிப்பிரமாணம் 104 இன் பிரகாரம் கணக்காய்விற்கு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இந்த விபத்து தொடர்பாக பழுதுபார்ப்பதற்கோ அல்லது காப்புறுதி உரித்து பெறுவது தொடர்பான எவ்வித தகவல்களும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.13 மனிதவள முகாமைத்துவம்

### (அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை | உள்ளபடியான ஊழியர் எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 13 | 08 | 05 |
| (ii) | மூன்றாம் நிலை | 02 | 01 | 01 |
| (iii) | இரண்டாம் நிலை | 378 | 85 | 293 |
| (iv) | ஆரம்ப நிலை | 36 | 35 | 01 |
| | மொத்தம் | 429 | 129 | 300 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மீளாய்வாண்டின் இறுதி வரையில் 300 வெற்றிடங்களை நிரப்புவதற்கு அமைச்சு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை

(ii) அமைச்சின் ஊழியர் எண்ணிக்கையில் வெலிசற ஹோமியோபதி வைத்தியசாலையினதும் அநுராதபுரம் சனசமூக சுகாதார சேவையினதும் உத்தியோகத்தர்கள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

## 2. தலைப்பு 220 – ஆயுர்வேதத் திணைக்களம்

### 2.1 கணக்காய்வின் நோக்கெல்லை

ஆயுர்வேதத் திணைக்களத்தின் 2013 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக்கூற்றுக்கள் பதிவேடுகள், ஆவணங்கள் மற்றும் ஏனைய அறிக்கைகள் உள்ளடக்கப்பட்ட ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2014 செப்தெம்பர் 22 ஆம் திகதி திணைக்களத்தின் தலைவருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

### 2.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக் கூற்று என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய சட்டரீதியான ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பராமரித்துச் செல்லல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பராமரித்துச் செல்லல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 2.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் ஆயுர்வேதத் திணைக்களத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கும், இணக்கக் கூற்றும் இங்கே (அ) முதல் (ஈ) வரையான பொது அவதானிப்புக்கள் மற்றும் கீழே 2.4 தொடக்கம் 2.15 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்பட்டது.

### (அ) பதிவேடுகள் மற்றும் ஏடுகள் பேணப்படாமை

திணைக்களத்தினால் 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றுநிருபத்தின் படி நிலையான சொத்துப் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை.

### (ஆ) பாதீட்டு முரண்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 16 செலவின விடயங்களிற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 19,003,000 தொகையான தேறிய ஏற்பாடு முழுவதும் சேமிக்கப்பட்டிருந்தது.

(ii) 45 செலவின விடயங்களுக்காக மிகையான நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டமையின் காரணமாக நிதியேற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பு அந்த செலவின விடயங்களுக்குரிய தேறிய ஏற்பாட்டில் 41 சதவீதம் முதல் 99 சதவீதம் வரையிலான வீச்சினைக் கொண்டிருந்தது.

### (இ) பொது வைப்புக் கணக்கு

2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு திணைக்களத்தின் வைப்புக் கணக்கின் மீதி ரூபா 13,443,317 ஆக இருந்ததுடன் அதில் 2 வருடங்களை விஞ்சிய ரூபா 477,334 தொகையான 19 வைப்புக்கள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்குகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 22001 ஆம் விடய இலக்க முற்பணக் கணக்கு தொடர்பாக 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான இணக்கக்கூற்றின் பிரகாரம் அத்திகதியில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 5,445,347 ஆக இருந்ததுடன் அந்த நிலுவை மீதியை அறவீடு செய்யும் பின்தொடர் நடவடிக்கைகள் நலிவான நிலையில் காணப்பட்டது.

(ii) தனிப்பட்ட மீதி வகைப்படுத்தல் பொழிப்புக்களின் கூட்டுத்தொகைக்கும் கட்டுப்பாட்டுக் கணக்கின் ஆண்டின் இறுதி மீதிக்கும் இடையே ரூபா 24,430 தொகையான வேறுபாடு காணப்பட்டதுடன் அதற்கான காரணம் இனங்காணப்பட்டிருக்கவில்லை.

(iii) முற்பணக் கணக்கின் கடன்கொடுத்தோர் பட்டோலையிலும் கடன் கொடுத்தோருக்காக பேணப்பட்ட பட்டோலையிலும் ஒரு உத்தியோகத்தரின் கடன் மீதியில் ரூபா 16,028 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(iv) முற்பணக் கணக்கில் உள்ளடக்கப்படாத 2013 திசெம்பர் மாதத்தை உள்ளடக்கிய பதிவேட்டில் குறிப்பிடப்பட்ட ரூபா 212,556 பெறுமதியான மீதி அவதானிக்கப்பட்டது.

(v) வைத்திய உத்தியோகத்தரின் விழா முற்பண மீதியான ரூபா 1,000 தொகை முற்பணக் கணக்கில் 2 இடங்களில் பதியப்பட்டிருந்தது.

(vi) தனிப்பட்ட மீதி வகைப்படுத்தல் பொழிப்புக்களின் படி திணைக்களத்தின் சேவையில் ஈடுபட்டிருக்கின்ற உத்தியோகத்தர்களிடமிருந்து 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அறவிட வேண்டிய கடன் மீதி ரூபா 78,245,462 தொகையாக இருந்ததுடன் அது தொடர்பாக

மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் போது பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

* தெற்கு, கிழக்கு, வடமத்திய, மேல் மற்றும் தென்மேல் மாகாண சபைகளுக்கு இடமாற்றாகிச் சென்ற 10 சனசமூக சுகாதார வைத்திய உத்தியோகத்தர்களிடமிருந்து 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 223,555 தொகையான கடன் அறவிடுவதற்கு இருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது ரூபா 14,500 தொகையான கடன் மீதி மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான மீதியான ரூபா 209,055 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை பதிவேடு பேணப்படாமையின் காரணமாக இதன் காலப்பகுப்பாய்வினை பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வில் முடியாதிருந்தது.

* அமைய மற்றும் ஒப்பந்த அடிப்படையில் சேர்க்கப்பட்ட 05 உத்தியோகத்தர்களிடமிருந்து பல வருட காலமாக அறவிட வேண்டியிருந்த ரூபா 5,000 தொகையான விழா முற்பண மீதிகளை மீளாய்வாண்டின் போதும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

(vii) இடமாற்றலாகி வந்த உத்தியோகத்தர்களின் கடன் தொடர்பான விபரம் உரிய மாதிகளின்படி தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. 43 உத்தியோகத்தர்களுக்குரிய ரூபா 7,179,080 தொகையான கடன் மீதி அறவிட வேண்டியிருந்தமை இணக்கக்கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் அந்த உத்தியோகத்தர்களில் இடம் மாற்றலாகிவந்த திகதி, உத்தியோகத்தர்களின் பதவி போன்ற தகவல்கள் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

(viii) ஏனைய நிறுவனங்களில் இருந்து இடமாற்றலாகி வந்த 4 உத்தியோகத்தர்களிடம் இருந்து ரூபா 1,428,032 தொகையான அறவிட வேண்டிய கடன் மீதி பல வருடங்களாக தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

(ix) 16 உத்தியோகத்தர்களின் ஆதனக் கடன் தீர்க்கப்பட்டிருந்த போதிலும் அவர்களின் உரித்துறுதிகள் திணைக்களத்தால் விடுவிக்கப்படாமல் காப்பகத்தில் வைக்கப்பட்டிருந்தது.

(x) 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு மீதி ரூபா 256,200 தொகையான 3 ஆதனக் கடன்களுக்கான உரித்துறுதிகள் பெறப்பட்டிருக்கவில்லை.

(xi) திணைக்களத்தால் செலுத்தப்பட்ட ரூபா 1,359,170 தொகையான 6 ஆதனக் கடனுக்காக அட்டோனி அதிகாரம் பெற்றுக்கொள்வதற்கு கடிதம் அனுப்பப்பட்டிருந்த போதிலும் கிடைத்திருக்கவில்லை.

(xii) திணைக்களத்தால் செலுத்தப்பட்ட ரூபா 1,569,900 தொகையான ஆதனக் கடனுக்காக அட்டோனி அதிகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

**2.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்**

---

**2.4.1 உள்ளகக் கணக்காய்வு**

---

திணைக்களத்தில் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு தாபிக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது உள்ளகக் கணக்காய்வாளர் பதவி வெற்றிடமாக காணப்பட்டது. மீளாய்வாண்டில் உள்ளகக் கணக்காய்வு ஐய வினாக்களின் பிரதிகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன் போதியளவான உள்ளகக் கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**2.4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவை அமுல்படுத்தல்**

---

மீளாய்வாண்டின் போது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் 03 கூட்டங்கள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தது.

## 2.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

### (அ) விளைவற்ற மற்றும் குறைவாக பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

கீழே வகைப்படுத்தப்பட்டவாறு சில சொத்துக்கள் விளைவற்று அல்லது குறைவாக பயன்படுத்தப்பட்டிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

| சொத்து வகை | அலகுகளின் எண்ணிக்கை | விளைவற்று அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட காலம் |
|---|---|---|
| பொரளை ஆயுர்வேத வைத்தியசாலைக்கு 2011 செப்தெம்பர் 26 ஆந் திகதி ரூபா 6,500,000 தொகையில் கொள்வனவு செய்யப்பட்ட கதிர்வீச்சு இயந்திரம் | 01 | 02 வருடங்கள் |
| 2011 மே 24 ஆந் திகதி 1 ரூபா 42,500 படி ரூபா 127,500 தொகையில் கொள்வனவு செய்யப்பட்ட நேரப்பதிவு இயந்திரங்கள் | 03 | |
| மருந்து உலர்த்தும் இயந்திரம் | 01 | 02 வருடங்கள் |
| மாத்திரை தயாரிக்கும் இயந்திரம் | 01 | |
| மருந்து கலக்கும் இயந்திரங்கள் | 02 | |
| மின்விசிறி (தரையில் வைக்கும்) | 01 | |
| அலுமினியம் பாற்குவளை(பெரியது) | 04 | |
| பிளாஸ்டிக் பாற்குவளை(சிறியது) | 04 | |
| அலுமினியம் பாற்குவளை(சிறியது) | 02 | |

| | |
|---|---|
| ஸ்டீமர் மேற்பகுதி | 01 |
| டிகீஸ் (பெரியது) | 01 |
| கேஸ் லிப் பேனர் | 06 |
| மின் விளக்கு (மீள உபயோகிக்கக் கூடிய) | 01 |
| டியூப் லைட் கேஸ் (பெரியது) | 03 |
| இரும்பு அளவு நாடா | 01 |

**(ஆ) வருடாந்த பொருள் மெய்மையாய்வை நடத்துதல்**

-----------------------------------------------------------------------------

திணைக்களத்தால் 2013 ஆம் ஆண்டிற்கான வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு அந்த அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபாதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) வெளித்தரப்பினர்களுக்கு வழங்கப்பட்ட சொத்துக்கள்**

--------------------------------------------------------------------------------------

திணைக்களத்திற்குச் சொந்தமான வேன் வாகனம் 2010 மே 25 ஆந் திகதி தொடக்கம் சுதேச வைத்தியத்துறை அமைச்சிற்கு விடுவிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**(ஈ) நிதி ஏற்பாட்டை விஞ்சி பொறுப்புக்கள் ஏற்பட்டமை**

----------------------------------------------------------------------------------------

நிதிப்பிரமாணம் 94(1) இற்கு முரணான ஆயுர்வேத திணைக்களத்தால் 2013 ஆம் ஆண்டின் போது 49 செலவின விடயங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதியேற்பாட்டில் பயன்படுத்தப்பட்டதன் பின்னர் சேமிப்பினை கிகைத்து ரூபா 48,764,710 தொகையான பொறுப்புக்கள் ஏற்பட்டிருந்தன.

## 2.6 இணக்கமின்மைகள்

---------------------------------

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மை**

கணக்காய்வுத் தெரிவுச் செவ்வையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றின் ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வுசெய்து காட்டப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றிற்கான தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மை |
|---|---|---|
| | ரூபா | |
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை | | |
| XII ஆவது அத்தியாயத்தின் 1 ஆம் பிரிவு | | ஆயுர்வேத திணைக்களத்தின் ஊழியர்கள் விடுமுறை விண்ணப்பிக்காமல் கடமைக்கு அறிக்கை இடாத சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் | | |
| நிதிப்பிரமாணம் 104 | | (அ) பல்லேகல மூலிகைத் தோட்டத்தில் சேதத்திற்குள்ளாகிய சந்தன மரத்தின் மொத்த நிறை கிலோ கிராம் 63 ஆக இருந்ததுடன் இது தொடர்பாக பலகொல்ல |

பொலிஸ் நிலையத்தின் முறைப்பாட்டு இலக்கம் 09/91/M01B இன் கீழ் முறைப்பாடு செய்திருந்த போதிலும் கணக்காய்வுத் திகதியான 2013 நவம்பர் 05 ஆம் திகதி வரையிலும் பொலீஸ் பரிசோதனை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

இந்த இழப்பு தொடர்பாக நிதிப்பிரமாணம் 103 மற்றும் 104 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்து கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) திணைக்களம் 2013 சனவரி 05 ஆம் திகதி விபத்துக்குள்ளாகிய வாகனம் தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. 2013 ஆம் ஆண்டின் போது திணைக்களத்தில் வாகனங்களுக்கு ஏற்பட்ட விபத்துக்கள் தொடர்பாக கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை.

## 2.7 செயற்திட்டத்தை அமுலாக்குவதிலுள்ள நலிவுகள்

செயற்திட்டத்தை ஆரம்பிக்காது கைவிடல், செயற்திட்டத்தை பூர்த்தி செய்யாது கைவிடல் மற்றும் செயற்திட்டத்தின் தாமதம் தொடர்பான கணக்காய்வு தெரிவுப் பரிசோதனைகளின் போது வெளிப்படுத்தப்பட்ட சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

### (அ) செயற்திட்டத்தை ஆரம்பிக்காது கைவிடல்

திணைக்களத்தால் பின்வரும் செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| செயற்திட்டம் | மதிப்பிடப்பட்ட கிரயம் | ஆரம்பிக்கப்பட வேண்டிய திகதி | ஆரம்பிக்காமைக்கான காரணம் சுருக்கமாக |
|---|---|---|---|
| | ரூபா மில்லியன் | | |
| பொரளை ஆயுர்வேத போதனா வைத்தியசாலை கட்டிடத் தொகுதியின் II வது கட்டம் | 115 | 2013 மே | விலை முரண்களுக்காக நிதி, திட்டமிடல் அமைச்சின் அங்கீகாரம் பெறவேண்டி இருந்தது. |
| யக்கல ஆயுர்வேத வைத்தியசாலை அபிவிருத்தியின் கீழ் 10 மாடிகளையுடைய கட்டிட நிர்மாணம் | 15 | 2013 யூலை | விஞ்ஞான நிறுவகத்திற்கு ஒதுக்கப்பட்ட காணியில் 4 ஏக்கர் நிலத்தை பெற்றுக்கொள்வதற்கான இணக்கப்பாட்டை பெற்றுக் கொள்ளும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றது. |
| நாவின்ன ஆராய்ச்சி வைத்தியசாலையில் ஐந்து மாடிக் கட்டிட நிர்மாணம் | 15 | 2013 பெப்ரவரி | நிதி, திட்டமிடல் அமைச்சின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. |
| பட்டிபொல மூலிகைத் தோட்ட சமயலறை நிர்மாணத்தின் II ஆவது கட்டம் | 03 | 2013 மார்ச் | புதிய திட்டத்தின் பிரகாரம் கட்டிடத் திணைக்களத்தின் மதிப்பீட்டைப் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுக்கொண்டிருந்தது. |

| | | | |
|---|---|---|---|
| கன்னெலிய மூலிகைத் தோட்டம் சுற்றுலா விடுதி நிர்மாணம் | 4 | 2013 மார்ச் | நிர்மானத்திற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

**(ஆ) செயற்திட்டத்தை நிறைவேற்றுவதில் தாமதம்**

திணைக்களத்தால் பின்வரும் செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதம் அவதானிக்கப்பட்டன.

| செயற்திட்டம் | மதிப்பிடப் பட்ட கிரயம் | ஆரம்பிக்க ப்பட வேண்டிய திகதி | பூர்த்தி செய்யப் பட வேண்டி ய திகதி | பூர்த்தி செய்யப்பட்ட திகதி | 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் செலவினம் | தாமதத்திற்கான காரணம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா. மில்லியன் | | | | ரூபா | |
| பிரதான அலுவலகத்தின் சாரதி ஓய்வறை நிர்மாணம் | 3.00 | 2013 சனவரி | 2013 ஒக்தோபர் | பூர்த்திசெய்யப்படவில்லை | 643,331 (24 சதவீதம் மாத்திரம் பூர்த்திசெய்யப்பட்டிருந்தது) | சமர்ப்பிக்கப்படவில்லை |
| அம்பாறை ஆயுர்வேத வைத்தியசாலயின் முதியோர் வாட்டின் விறாந்தை நிர்மாணம் | 0.68 | 2013 சனவரி | 2013 யூலை | பூர்த்திசெய்யப்படவில்லை | | ஒப்பந்தம் கையளிக்கப்பட்டுள்ளது |
| சுதேச வைத்தியத்துறை முறைமை தொடர்பான தேசிய | 7.50 | 2013 சனவரி | 2013 செப்தெம்பர் | பூர்த்திசெய்யப்படவில்லை | 1,813,866 (60 சதவீதம் மாத்திரம் பூர்த்திசெய்யப்பட்டிருந்தது) | சமர்ப்பிக்கப்படவில்லை |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| நிறுவனத்தின் சிற்றுண்டிச்சாலை யுடன் ஆய்வுகூடம் மற்றும் மலசலகூட நிர்மாணத்தின் II ஆம் கட்டம் | | | | | | |
| ஹல்தும்முல்ல மூலிகைத் தோட்டத்தின் ஊழியர் ஓய்வறை நிர்மாணம் | 4.00 | 2013 பெப்ரவரி | 2013 திசெம்பர் | பூர்த்திசெய்யப்பட வில்லை | (60 சதவீதம் மாத்திரம் பூர்த்திசெய்யப்பட்டி ருந்தது) | சமர்ப்பிக்கப்பட வில்லை |
| கிராந்துருக்கே ாட்டை ஆய்வுகூட நிர்மாணம் | 3.00 | 2013 மார்ச் | 2013 திசெம்பர் | 2014 நவம்பர் வரையிலும் பூர்த்திசெய்யப்பட வில்லை | 3,493,961 | சமர்ப்பிக்கப்பட வில்லை |
| கிராந்துருக்கே ாட்டை பூங்கா நடத்துனரின் உத்தியோகபூர் வ இல்ல நிர்மாணம் | 4.00 | 2013 மார்ச் | 2013 நவம்பர் | 2014 நவம்பர் வரையிலும் பூர்த்திசெய்யப்பட வில்லை | 2,208,368 | சமர்ப்பிக்கப்பட வில்லை |
| ஹல்தும்முல்ல மூலிகைத் தோட்டத்தின் எல்லை வேலி நிர்மாணத்தின் II ஆம் கட்டம் | 3.00 | 2013 சனவரி | 2013 யூலை | சமர்ப்பிக்கப்பட வில்லை | 2,394,010 | சமர்ப்பிக்கப்பட வில்லை |

## 2.8 செயலாற்றல்

---------------------

2013 செயல் நடவடிக்கைத்திட்டத்தின் படி திணைக்களத்தின் செயல்முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

**போதிய அளவில் நிறைவேற்றப்படாத பிரதான பணி**

---

திணைக்களம் பிரதான செயற்பாடுகளை போதிய அளவில் நிறைவேற்றாதிருந்ததுடன், அவ்வாறு அவதானிக்கப்பட்ட சந்தர்ப்பங்களில் சில கீழே காண்பிக்கப்படுகின்றது.

(அ) யக்கல ஆயுர்வேத வைத்தியசாலை களஞ்சியம் மற்றும் பொதுக் கட்டிடம் பழுதுபார்த்தல் நடவடிக்கைகள் 2013 யூலை மாதத்தின் போது பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் 2013 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் அது பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அம்பாறை ஆயுர்வேத வைத்தியசாலையில் உற்பத்திக்கூடத்தின் கூரையை பழுதுபார்க்கும் நடவடிக்கைகள் 2013 ஆகஸ்ட் மாதத்தின் போது பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் 2013 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் அது பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) மன்வன்துடுவ வைத்தியசாலையில் வெளி நோயாளர் பிரிவின் கூரையை பழுதுபார்த்தல் 2013 நவம்பர் மாதத்தின் போது பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்ட போதிலும் 2013 ஆம் ஆண்டின் போது அச் செயற்பாடுகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(ஈ) தலைமை அலுவலகத்தின் நுழைவுக் கதவு மற்றும் அலுவலகத்தின் பழுது பார்த்தல் நடவடிக்கைகள் 2013 ஒக்தோபர் மாதத்தின் போது பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்ட போதிலும் 2013 ஆம் ஆண்டின் போது அந்த நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) ஹல்துமுல்ல மூலிகைத் தோட்ட சுற்றுலா விடுதியின் கூரையை பழுதுபார்த்தல், வர்ணம் பூசுதல் மற்றும் அலுவலகக் கட்டிடத்தை பழுதுபார்த்தல்கள் 2013 செப்தெம்பர் மாதத்தின் போது பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் அச்செயற்பாடுகள் 2013 ஆம் ஆண்டின் போது பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

## 2.9 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

-----------------------------------------------------------------------------------------------

திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்ட சில கொடுக்கல் வாங்கல்கள் சர்ச்சைக்குரிய வடிவிலானதாக இருந்தன. தெரிவுப் பரிசோதனைகளின் போது வெளிப்படுத்தப்பட்ட அவ்வாறான சில கொடுக்கல் வாங்கல் தொடர்பான விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) யக்கல ஆயுர்வேத வைத்தியசாலைக்கு சமைக்காத மற்றும் உலர் உணவுகள் வழங்கும் ஒப்பந்தம் தொடர்பான பரிசோதனையின் போது பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) கேள்வி கோரல் பத்திரத்தில் 159 உணவு வகைகளுக்காக கூறுவிலைகள் கோரப்பட்டிருந்த போதிலும் ஒப்பந்தம் கையளிக்கப்பட்ட வழங்குனர் அந்த உணவு வகைகளில் 41 இற்கு கூறுவிலைகள் சமப்ர்பித்திருக்கவில்லை. சமர்ப்பிக்கப்படாத உணவு வகைகள் சந்தையில் அதிக செலவினமுள்ள விடயங்களாக இருந்தன.

(ii) கொள்வனவு நிபந்தனை இலக்கம் 16 இன் படி உணவுப் பொருட்கள் தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட கூறு விலைகள் சந்தையில் காணப்படுகின்ற கூறுவிலைகளின் படி நம்பிக்கை கொள்ள முடியாத வகையில் ஆகக் குறைந்த வரி விலை குறிப்பிடப்பட்ட கேள்விகள் நிராகரிக்கும் அதிகாரம் கொள்வனவுக் குழுவிற்குரியதாக இருந்த போதிலும் யக்கல ஆயுர்வேத வைத்தியசாலைக்கு உணவு வழங்கும் ஒப்பந்தத்தைப் பெற்ற வழங்குனர் அவ்வாறு அசாதாரண கூறுவிலைகள் சமர்ப்பித்திருந்தார்.

(iii) பச்சை உலர் உணவுகளை வழங்குவதற்கான தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு அறிக்கையில் கொள்வனவுக் குழுவின் பரிந்துரைக்கான காரணத்தின் கீழ் அவரால் உணவு வகை சிலவற்றின் கூறுவிலைகள் வழங்கப்படாமையால் அந்த உணவுகளுக்கு தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் கூறுவிலைகள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு வழங்குனர் சமர்ப்பிக்காத 41 உணவு வகைகளுக்கு

கூறு விலைகள் சமர்ப்பிக்கப்பட்ட அடிப்படை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு அறிக்கையில் கேள்விதாரரினால் ஒட்டுமொத்த கொள்வனவுகளுக்கும் ஆகக் குறைந்த கூறுவிலை சமர்ப்பிக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், கேள்விதாரர் கூறு விலை சமர்ப்பித்த உணவு வகைகளின் அளவினைக் கவனத்திற்கொள்ளும் போது ஆகக் குறைந்த கூறு விலை வேறு கேள்விதாரர்களினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

(v) கம்பனியால் சமர்ப்பிக்கப்பட்ட பட்டியலின்படி செலுத்த வேண்டிய ரூபா 427,788 கூட்டுத்தொகைக்காக திணைக்களத்தால் 2014 சனவரி 27 ஆந் திகதி ரூபா 527,788 தொகை செலுத்தப்பட்டிருந்தது. அதன்படி திணைக்களத்தால் ரூபா 100,000 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

## 2.10 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

----------------------------------------------------------------

பொரளை வைத்தியசாலையில் எண்ணெய் பூசுவதற்காக உலர் மருந்துக் களஞ்சியத்தில் ஆரம்பத்தில் பெற்ற எண்ணெய்யின் அளவு மற்றும் அதற்குரிய ஏனைய பல்வேறு மருந்து வகைகளும் பயன்படுத்தப்பட்டு மருந்து எண்ணெய் வகை தயாரிக்கும் போது அவ்வாறு பெறப்பட்ட எண்ணெய்யின் அளவு பெற்ற ஆரம்ப எண்ணெய்யின் அளவிற்கு கிட்டியதாகவோ அல்லது சமமானதாகவோ இருக்க வேண்டிய போதிலும் தைலம் பிரிவில் 2013 ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட்ட சில எண்ணெய் வகைகள் பூர்த்திசெய்யப்பட்டு மருந்துக் களஞ்சியத்திற்கு கையளிக்கும் போது பெறப்பட்ட ஆரம்ப எண்ணெய்யின் அளவினை விட அசாதாரணமாக குறைவான அளவு எண்ணெய் வழங்கப்பட்டிருந்தமை தைலம் பிரிவின் பதிவேடுகள் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

## 2.11 நட்டங்களும் இழப்புக்களும்

-----------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) உலர் மருந்துக் களஞ்சியத்தில் காணப்பட்ட உலர் மருந்து இருப்பின் பௌதிக மற்றும் ஏடுகளில் உள்ளடக்கப்பட்ட இருப்புக்களுக்கிடையே வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(ஆ) கணக்காய்வுத் திகதியான 2014 ஆகஸ்ட் 08 ஆந் திகதி வரையிலும் பூர்த்தி செய்யப்பட்ட மருந்துக் களஞ்சியத்தில் களஞ்சியப்படுத்தப்பட்டு காலாவதியாகும் திகதி முறையே 2012 யூலை, 2014 பெப்ரவரி, 2011 யூன் 30, 2011 ஒக்தோபர், 2012 ஒக்தோபர் என சிரப் வாசக, புதிய கார்சக க்வாத, கட்டிபலாதி வூர்ணய, முன்டி (மடமஹன) அர்கய, சுரணிமஹ, மெதஹர அர்கய, தந்தாரிஸ்டய போன்ற காலாவதியான மருந்துகளின் பெறுமதி ரூபா 9,615 ஆக இருந்தன.

(இ) காலாவதியாவதற்கு முன்னர் அந்த மருந்துகளை ஆயுர்வேத வைத்தியசாலைக்கு கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) பூர்த்தியான மருந்துக் களஞ்சியத்தின் பௌதிக இருப்பு மீதிக்கும் புத்தகப் பெறுமதிக்குமிடையே வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(உ) முடிவுப் பொருள் மருந்துக் களஞ்சியத்தில் பொருத்தமான பிரகாரம் களஞ்சியப்படுத்தப்படாமையால் 60,000 சீன ஊசிகள் அளவில் பயன்பாட்டிற்கு எடுக்க முடியாதிருந்தது. அந்த இருப்பின் பெறுமதி ரூபா 592,000 ஆகும்.

## 2.12 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2012 மார்ச் 01 ஆந் திகதிக்கு முன்னர் பொரளை ஆயுர்வேத வைத்தியசாலையில் உலர் மருந்துக் களஞ்சியத்திற்காகவும் சமையலறைக்காகவும் ரூபா 60 விலையில் பெறப்பட்ட 500 மில்லி லீற்றர் பதனிட்ட பால் போத்தல் பெறப்பட்டிருந்த போதிலும் அத்திகதியில் வேறொரு வழங்குனரிடமிருந்து ஒரு போத்தல் ரூபா 150 படி உலர் மருந்துக் களஞ்சியத்திற்காக (2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளுக்காக 2517 பால் போத்தல்கள்) கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் அதன் காரணமாக அரசாங்கத்திற்கு 2012 ஆம் ஆண்டில் ரூபா 80,730 நட்டமும், 2013 ஆம்

ஆண்டின் ஆகஸ்ட் 23 ஆந் திகதி வரையில் ரூபா 145,800 நட்டமும் ஏற்பட்டிருந்தன.

(ஆ) 2013 ஆம் ஆண்டிற்காக பொரளை ஆயுர்வேத வைத்தியசாலைக்கு உணவு வழங்கும் கம்பனி ஒரு பதனிடப்பட்ட பால் போத்தலுக்காக ரூபா 47 விலை சமர்ப்பித்திருந்த போதிலும், அக்கம்பனியிலிருந்து பதனிட்ட பால் கொள்வனவு செய்யப்படாமல் வேறு விற்பனை முகவர் நிறுவனத்திலிருந்து போத்தலொன்று ரூபா 60 படி கொள்வனவு செய்யப்பட்டமையின் காரணமாக 2013 ஆகஸ்ட் 23 ஆந் திகதி வரையில் போத்தலொன்றுக்கு ரூபா 13 படி பதனிட்ட 8,000 பால் போத்தல்களுக்காக ரூபா 104,000 நட்டம் அரசாங்கத்திற்கு ஏற்பட்டிருந்தது.

## 2.13 முகாமைத்துவ நலிவுகள்

------------------------------------------

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது பின்வரும் நலிவுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) பொரளை ஆயுர்வேத வைத்தியசாலையின் மருந்து உற்பத்திக்கூடத்தில் பயன்படுத்தப்படுகின்ற தராசுப் படிகள் கணக்காய்வுத் திகதியான 2014 சனவரி 01 ஆந் திகதி வரையிலும் வருடாந்த பதிவு செய்தல் மற்றும் பழுதுபார்த்தல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக மருந்துகளின் நிறை அளவு மாற்றமடைவதால் மருந்துகளில் பல்வேறு மோசடிகள் ஏற்படக்கூடியதாக இருந்தது.

(ஆ) பொரளை ஆயுர்வேத வைத்தியசாலைக்கு பச்சையான மருந்துகளைக் கொடுப்பனவு செய்யும் ஒப்பந்தத்தை வழங்கும் போது கேள்விதாரர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட விலைகளிற்கிடையே அதிக விலையுடன் கூடிய 100 மருந்து வகைகளுக்காக அதிக விலை சமர்ப்பித்த கேள்விதாரர் தெரிவு செய்யப்பட்டிருந்தார்.

(இ) யக்கல ஆயுர்வேத வைத்தியசாலையில் காலாவதியாகும் திகதியாக 2001 பெப்ரவரி எனக் குறிப்பிடப்பட்ட 750ml எண்ணெய் போத்தல்கள் 03 அகற்றப்படாமல் களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்தது.

(ஈ) யக்கல ஆயுர்வேத வைத்தியசாலையில் 2013 இல் அமுல்படுத்தப்பட்ட திட்டத்தின் மூலம் களஞ்சியம் திருத்தப்படுவதாகக் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் 2014 யூன் 19 ஆந் திகதி கணக்காய்வுத் திகதி வரையிலும் அச் செயற்பாடு நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(உ) 2013 சனவரி 07 ஆந் திகதி நடைபெற்ற கொள்வனவுக் குழுவின் மூலம் ஹல்தும்முல்ல மூலிகைத் தோட்டத்தில் கண்ணாடித் தொட்டியை பழுதுபார்த்தல் அத்தியாவசிய பழுதுபார்த்தல்களாகக் கருதி துரிதமாக செய்ய வேண்டியமையால் ரூபா 16,904,160 மதிப்பீட்டில் அரசாங்கக் கைத்தொழிற்சாலைக்கு கையளிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டிருந்தது. அது தொடர்பான பரீட்சிப்பின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) 2013 சனவரி 15 ஆந் திகதி ஒப்பந்தம் கையளித்தல் 03/3/5/29 ஆம் இலக்க கடிதம் அனுப்பப்பட்ட போதிலும் அதன் ஒப்பந்த நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட வேண்டிய திகதி மற்றும் ஒப்பந்தக் காலப்பகுதி உரியவாறு குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

(ii) ஒப்பந்தக்காரர் ஒப்பந்தத்தை ஏற்றுக்கொண்டமைக்கான அல்லது ஆரம்பிக்கப்படுகின்றமைக்கான திகதி குறிப்பிடப்பட்டு ஒப்பந்தக் கையேற்றல் கடிதம் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) ஒப்பந்தம் பூர்த்தி செய்யப்பட்டதாக குறிப்பிடப்பட்ட விவசாய உத்தியோகத்தரின் ஹல்/ஓசு/வகா/02/07 ஆம் இலக்க கடிதத்தின்படி ஒப்பந்தத்திற்காக பத்து மாத காலம் எடுத்திருந்தது.

(iv) அதனால் துரிதமாக செய்யப்பட வேண்டியது எனத் தீர்மானிக்கப்பட்டு வழங்கப்பட்ட இந்த பழுதுபார்த்தலுக்காக நீண்ட காலம் எடுக்கப்பட்டிருந்தது.

(ஊ) பட்டிபொல மூலிகைத் தோட்டத்தின் எல்லை வேலியை நிர்மாணித்தல் மற்றும் உள்ளக வீதிகளை நிர்மாணிக்கும் ஒப்பந்தத்திற்கான உடன்படிக்கைகளைச் கைச்சாத்திடும் போது ஒப்பந்தச் செயற்பாடுகள் தாமதமடைந்தால் அதற்கான தாமதக்கட்டணமாக ஒப்பந்தப் பெறுமதியில் ஏதாவது சதவீதத்தைக் கழிக்கும் நிபந்தனை உடன்படிக்கையில் உள்ளடக்கப்படாமையின் காரணமாக தாமதித்து

பூர்த்தி செய்யப்பட்ட இந்த ஒப்பந்தத்திற்காக தாமதக் கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(எ) பன்ளேகல ஆராய்ச்சி மூலிகைத் தோட்டத்தின் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் வருமானம் ரூபா 200,000 இனாலும், செலவினம் ரூபா 600,000 இனாலும் அதிகரித்திருந்தது. அவ்வாறே ஒவ்வொரு வருடங்களிலும் வருமானத்தை விஞ்சி செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. 2011 ஆம் ஆண்டு முதல் 2013 ஆம் ஆண்டு வரை ரூபா 5,610,137 தொகை வருமானத்தை விஞ்சி செலவிடப்பட்டிருந்தது.

(ஏ) பன்ளேகல ஆராய்ச்சி மூலிகைத் தோட்டத்திலிருந்து மருந்து மூலப்பொருட்கள் பெறக்கூடியதாக இருந்தமை அவதானிக்கப்பட்டதுடன் அந்த மருந்துகள் ஆயுர்வேதத் திணைக்களத்திற்கு, அதன் கீழ் காணப்படுகின்ற வைத்தியசாலைக்கு அல்லது ஏனைய நிறுவனத்திற்கு வழங்குவதற்கு 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஐ) பன்ளேகல மூலிகைத் தோட்டத்திற்குரிய நிலத்திற்கான உறுதி அல்லது உரித்துக் கையளித்தல் ஆயுர்வேதத் திணைக்களத்திடம் காணப்படவில்லை. எனினும், இந்த நிலப் பகுதி ஆயுர்வேத திணைக்களத்தால் அபிவிருத்தி செய்யப்பட்டிருந்ததுடன் அந்த நிலப்பகுதியை ஆயுர்வேத திணைக்களத்திற்கு கையேற்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஒ) பன்ளேகல மூலிகைத் தோட்டத்தின் எல்லை வேலி உரிய முறையில் அமைக்கப்பட்டிருக்கவில்லை. அதனால் அனுமதியற்ற நபர்கள் உள்வரக் கூடியதாக இருந்ததுடன் மருந்துக் கன்றுகள் மற்றும் பெறுமதியான மூலிகைகள் களவு போகக் கூடிய அபாயம் காணப்பட்டது.

(ஓ) கடந்த 4 வருட காலத்தில் நாற்றுக்கள் உற்பத்தி (மொத்த) பின்வருமாறு இருந்தது.

| | |
|---|---|
| 2010 | 26,257 |
| 2011 | 8,969 |
| 2012 | 13,043 |
| 2013 | 9,631 |

இதன்படி முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் நாற்றுக்கள் உற்பத்தி 3,412 இனால் குறைவடைந்திருந்தது.

(ஔ) 2013 மே 28 ஆந் திகதிய A/25 956524 ஆம் இலக்க வழங்கல் கட்டளையின் மூலம் ஆயுர்வேதத் திணைக்களத்திடமிருந்து அனுப்பிவைக்கப்பட்ட கணனி கணக்காய்வுத் திகதியான 2014 ஆகஸ்ட் 29 ஆந் திகதி வரையிலும் பாவனைக்கு எடுக்கப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டதுடன் கணனியைப் பயன்படுத்துவதற்குத் தேவையான மென்பொருள் உள்ளடக்கப்படாமையின் காரணமாக அதனை ஆக்கபூர்வமான செயற்பாடுகளுக்காக பயன்படுத்துவதற்கு முடியாத நிலைமை காணப்பட்டது.

(க) திணைக்களத்திற்குச் சொந்தமான 02 ஆராய்ச்சி மூலிகைத் தோட்டங்கள் (ஹல்துமுல்ல மற்றும் நாவின்ன) மற்றும் 2 மூலிகைத் தோட்டங்கள் (கிராந்துக் கோட்டை மற்றும் பட்டிபொல) போன்ற மூலிகைத் தோட்டங்களில் நிரந்தர மருந்து வகைகள் தொடர்பாக ஒவ்வொரு மூலிகைத் தோட்டத்திற்கும் உரித்தாக பதிவேடொன்றைத் தயாரிக்கும் முக்கயத்துவம் சுட்டிக் காண்பிக்கப்பட்ட போதிலும் அவ்வாறான பதிவேடொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(கா) ஆயுர்வேத ஆராய்ச்சி காசாளர் பிரிவில் 2014 ஆகஸ்ட் 08 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக காசு மெய்மையாய்வின் போது காசாளர் கடமைகளை நிறைவேற்றுகின்ற பிரதான முகாமைத்துவ உதவியாளரின் பொறுப்பில் ரூபா 62,949 தொகை காணப்பட்டதுடன் அது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மேற்கூறப்பட்ட பணத்தில் நாற்றுக்கள் விற்பனை வருமானம், எரிபொருள் முற்பணம், வைத்தியருக்கு செலுத்துவதற்கிருந்த முற்பணம் மற்றும் சில்லறைக்காசு மீதி உள்ளடங்கியிருந்ததுடன் அப்பணத்திற்குரிய செயற்பாடுகளுக்காக தனித்தனியாக வைக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) காசுப் பொறுப்பு முகாமைத்துவ உதவியாளரிடமிருந்து பின்வரும் பணம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

- காப்பக பரீட்சிப்பின் போது அதன் பெட்டியில் காணப்பட்ட ரூபா 1,884 தொகை
- மேசை இலாச்சியில் காணப்பட்ட ரூபா 700 தொகை
- 2014 ஆகஸ்ட் 08 ஆந் திகதி வரையில் காசாளரிடம் காணப்பட வேண்டிய காசின் அளவினை விட மேலதிகமாக ரூபா 1,507 தொகை காணப்பட்டது.
- முற்பணம் பெறப்பட்டு அச் செயற்பாடு நிறைவேறியதும் உடனடியாக அம் முற்பணம் தீர்க்கப்பட வேண்டிய போதிலும் 2014 யூலை 30 ஆந் திகதி வைத்தியருக்கு பெண் நோய் சிகிச்சை நிலையத்திற்குத் தேவையான உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கு கோரப்பட்ட ரூபா 20,000 முற்பணம் 2014 ஆகஸ்ட் 08 ஆந் திகதி வரையிலும் அந்த வைத்தியருக்குச் செலுத்தாது காசுப் பொறுப்பாளரின் பொறுப்பில் விளைவற்றுக் காணப்பட்டதுடன் அப் பணத்தை திணைக்களத்திற்கு கட்டுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(கி) மருந்து நாற்றுக்கள் விற்பனை வருமானத்தில் கடைசியாக 2014 யூலை 08 ஆந் திகதி தலைமை அலுவலகத்தில் ரூபா 22,760 தொகை வைப்புச் செய்யப்பட்டிருந்தது.

(கீ) மூலிகை நாற்றுக்கள் விற்பனையால் கிடைக்கின்ற வருமானம் பற்றுச்சீட்டு இலக்கத்தின் படி பதிவேடொன்றில் பதியப்பட்டு தலைமை அலுவலகத்திற்கு கட்டப்பட வேண்டிய போதிலும், 2014 சனவரி 24 ஆந் திகதியின் பின்னர் நிறுவனம் அவ்வாறு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(கு) மீளாய்வாண்டின் போது தலைமை அலுவலகத்திலிருந்து பெறப்பட்ட பற்றுச்சீட்டுப் புத்தகங்கள் பதிவேடுகளுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(கூ) சமையலறை உணவு கட்டளைகளைத் தயாரித்தல், ஒப்பந்தக்காரர் வழங்குகின்ற உணவுகளைக் கையேற்றல் மற்றும் சமையலறைக்காக உணவுகளை விநியோகித்தல் போன்ற சகல செயற்பாடுகளும் உணவு அவதானிப்பாளர் பதவியால் மேவுகை செய்யப்படுகின்ற தாதி உதவியாளரினால்

மேற்கொள்ளப்படுகின்றமையால் இதன் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை தொடர்பாக கணக்காய்வின் போது திருப்தியடைய முடியாதிருந்தது.

(கெ) உணவு கட்டளையிடப்படும் பதிவேட்டின் மூலப் பிரதி வழங்குனருக்கு வழங்க வேண்டிய போதிலும் கணக்காய்வுச் சந்தர்ப்பம் வரையிலும் அந்தப் பிரதி தாதி உதவியாளரிடம் காணப்பட்டது.

## 2.14 செயலாற்றல்

கடந்த 4 வருடங்களில் வைத்தியசாலையில் சிகிச்சைகளுக்காக நோயாளர்களின் வருகை தொடர்பான விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| **ஆண்டு** | **நோயாளர்களின் எண்ணிக்கை** |
|---|---|
| 2013 | 34,536 |
| 2012 | 39,549 |
| 2011 | 39,075 |
| 2010 | 36,231 |

இதற்கு மேலதிகமாக 2013 ஆம் ஆண்டின் போது முதியோர் சிகிச்சைக்காக 2,529 நோயாளர்கள் வருகை தந்திருந்ததுடன் அதன்படி அவ்வாண்டில் சிகிச்சை பெற்ற நோயாளர்களின் எண்ணிக்கை 37,065 ஆக இருந்தது. கடந்த 4 வருடங்களில் சிகிச்சைகளுக்காக வருகை தந்த நோயாளர்களின் எண்ணிக்கை குறைவடைந்திருந்தது.

கடந்த 5 வருடங்களில் வைத்தியசாலையில் வெளி நோயாளர் பிரிவிற்கு வருகை தந்த நோயாளர்களின் எண்ணிக்கை பின்வருமாறு இருந்தது.

| ஆண்டு | நோயாளர்களின் எண்ணிக்கை |
| --- | --- |
| 2013 | 69,897 |
| 2012 | 71,805 |
| 2011 | 72,717 |
| 2010 | 73,170 |
| 2009 | 75,394 |

அதன் படி கடந்த 5 வருடங்களில் வெளி நோயாளர் பிரிவிற்கு நோயாளர்களின் வருகை குறைவடைந்திருந்தது.

## 2.15 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை | உள்ளபடியான ஊழியர் எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
| --- | --- | --- | --- | --- |
| (i) | சிரேஷ்ட நிலை | 256 | 189 | 67 |
| (ii) | மூன்றாம் நிலை | 187 | 83 | 104 |
| (iii) | இரண்டாம் நிலை | 279 | 211 | 68 |
| (iv) | ஆரம்ப நிலை | 717 | 412 | 305 |
| | மொத்தம் | 1,439 | 895 | 544 |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் இறுதி வரையில் 544 வெற்றிடங்களை நிரப்புவதற்கு திணைக்களம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) ஆயுர்வேதத் திணைக்களத்தில் உத்தியோகத்தரொருவர் 2013 ஆம் ஆண்டில் 93 விடுமுறைகளும், 2014 ஆம் ஆண்டு சனவரி முதல் ஏப்ரல் வரை 45 விடுமுறைகளும் எடுத்திருந்த போதிலும் அவருக்கு 2013 ஆம் ஆண்டில் முழுச் சம்பளமும் படிகளும் செலுத்தப்பட்டிருந்தன.